மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லுவதை வைத்துக் கொண்டு விசாரித்துச் சொல்லுகிறேன். தவறு இருந்தால் அதுபற்றி நடவடிக்கை எடுக்கப்படும்.

(அஅ) நாகை மருத்துவமனைக்குப் புதிய நோயாளி ஊர்தி.

மாண்மிகு பேரவைத் துணைத் தலைவர்: திருவாளர்கள் கோ. வீரய்யன் மற்றும் எம். செல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்கு அதைக் கொண்டு வருவார்.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், நாகை மருத்துவ மனையில் 5—5—1985 முதல் ஆம்புலன்ஸ் இல்லாததால் அப்பகுதியில் திடீர் பாதிப்புகள் ஏற்படும் போது பாதிக்கப் பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டு வருவதற்கு ஏற்படும் இன்னல்கள் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்மிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மகிழத் தக்க அளவுக்கு பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

அறிக்கை.

தஞ்சை மாவட்டம், நாணகப்பட்டினம் அரசு தலைமையிட மருத்துவமனையிலிருந்து ஒரு பழைய ஊர்திக்கு பதிலாக, ஒரு புதிய ஊர்தி தமிழ்நாடு சுகாதாரப் போக்குவரத்து துறை இயக்குநரால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அந்த புதிய நோயாளி ஊர்தி தஞ்சாவூர் மாவட்ட காசநோய் அலுவலர் மூலமாக மாவட்ட மருத்துவ அலுவலர் நாகப்பட்டினத்திற்கு கொடுக்கப்படுகிறது. மேலும், "விபத்து மற்றும் அவசர சிகிச்சை பணியின்" கீழ் நாகப்பட்டிணம் அரசு தலைமையிட மருத்துவமனைக்கு இரு நோயாளி ஊர்திகள் (Ambulance vans) வாங்கவும், எரிபொருள், பராமரிப்பு, மருந்து போன்ற

1987 ஏப்ரல் 22] [திரு. ப. உ. சண்முகம்]

செலவினங்களுக்கு நிதி ஒப்பளிப்பும் சமீபத்தில் வழங்கப் பட்டுள்ளது. மற்றும் ஓட்டுநர், செவிலியர் போன்ற பணியிடங்கள் ஏற்படுத்தவும ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேற்படி இரு நோயாளி ஊர்திகள் போக்குவரத்து ஆணையர் மூலமாக வாங்கப்பட உள்ளன.

திரு. கோ. வீரய்யன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அறிக்கையை நான் படித்தேன். அறிக்கையில் இருப்பதை விட மகிழத் தக்க அளவுக்கு நிகழ்ச்சிகள் நடந்து இருக்கின்றன. அறிக்கையை நேற்று இரவு கொடுக்கும்போது கூட அதை சரி பார்த்துக் கொடுக்காமல் அதிகாரிகள் கொடுத்து இருக்கிறார்கள் என்பதையும் மாண்புமிகு அமைச்சருடைய கவனத்திற்கு கொண்டு வருகிறேன். மேற்படி இரு நோயாளி ஊர்திகள் போக்குவரத்து ஆணையர் மூலமாக வாங்கப்பட உள்ளன என்று இருக்கிறது. இரண்டு ஊர்திகள் நாகை மருத்துவமனையில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டு இருக்கின்றன. அதற்கான அந்த பராமரிப்பு, எரிபொருள் வாங்குவதற்கான உத்தரவுகள் இன்னும் பிறப்பிக்கப்படாததால் தான் அது பயன்படுத்த முடியாத நிலையில் இருக்கிறது. உதாரணமாக ஒன்று சொல்ல வேண்டுமானால் ஒரு சங்கடம் ஏற்பட்டது. ஒரு பொது விபத்து ஏற்பட்டு மார்ச் மாதம் 6 ஆம் தேதி அன்று தீ அணைப்பு நிலையத்திலிருந்து ஆம்புலன்ஸ் கொண்டு வந்து அந்த நோயாளிகளைக் கொண்டு வரும் நிலை ஏற்படும்போது அந்த தீ அணைப்பு நிலைய அதிகாரிகள் அந்த நோயாளிகளிடம் 60 ரூபாய் கட்டணம் வசூல் செய்து ரசீது கொடுத்து இருக்கிறார்கள். ஒரு நோயாளியை மருத்துவ மனைக்கு கொண்டு போவதற்கு அந்த தீ அணைப்பு நிலையம் 60 ரூபாய் கட்டணம் வசூல் செய்து இருக்கிறது. அது திரும்ப அந்த ஏழை மக்களுக்கு கிடைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உத்தரவிடுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது பற்றிய விவரங்களை எழுதித் தருவார்களானால் அரசு பரிசீலிக்கும். வாகனங்கள் எல்லாம் வாங்கப்பட்டு விட்டன என்பது அரசுக்குத் தெரியும். அதை திருத்திக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.